DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.242/2023**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணியன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சேவுகப்பெருமாள் என்ற சண்முகம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.07.2026

2 முதல் 7 எதிரிகள் ஆஜர். 8 ம் எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அதங்குடியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் 8 ம் எதிரி செல்லமுத்துவையும் தெரியும். கடந்த 2015 ம் ஆண்டு எதிரிகள் ஊரில் சுமார் 20 ஏக்கரில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்தேன். அப்போது தண்ணீர் பாய்ச்சலின்போது பிரச்சனைகள் ஏற்படும். அதன்பிறகு வெளியூரில் இருந்து வந்து நீங்கள் ஏன் விவசாயம் செய்கிறீர்கள் எங்களிடம் கொடுங்கள் நாங்களே விவசாயம் செய்கிறோம் என்று இறந்துபோன 1 ம் எதிரி கேட்டார். அதை நான் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டேன். அதன்பிறகு நான் விவசாயம் செய்து வந்தேன்.

2015 ம் ஆண்டு பிப்பரவரி மாதம் நாச்சியப்பன் என்பவரை காவலுக்கு போட்டு நான் விவசாயம் செய்து வந்தேன். அந்த சமயம் இரவு 8.00 மணிக்கு கதிர் அறுக்கும் மிஷினை வைத்து ஊர் ஆட்கள் சேர்ந்து கதிரை அறுத்துவிட்டார்கள். அப்போது இருட்டாக இருந்ததால் அதில் எதிரிகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. நான் போகும்போது என்னுடைய இடத்தில் 10 ஏக்கர் அளவிற்கு கதிரை அறுத்துவிட்டார்கள். மீதி 10 ஏக்கரில் கதிர் இருந்தது. பின்பு போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.